ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

आकौमाराद् गुरुचरणशुश्रूषया ब्रह्मविद्या-
स्वास्थायास्थामहह महतीमार्जितं कौशलं यत् ।
निद्राहेतोर्निशिनिशि कथाःशृण्वतां पार्थिवानां
कालक्षेपौपयिकमिदमप्याः कथं पर्यणंसीत ॥

नीलकण्ठदीक्षिताः ॥

பால்யாவஸ்தையிலிருந்தும், பிர்மவித்தையை எப்படியாவது அடையவேண்டுமென்று அதிக ஆவல்கொண்டு பக்தியுடன் ஆசார்யரின் திருவடிகளைப்பூஜித்து மற்றும் அவர்களுக்கு வேண்டிய பணிவிடையும் செய்து மிகவும் சிரமப்பட்டு யாதொரு பாண்டித்யமானது சம்பாதிக்கப் பட்டதோ, அவ்விதம் சிரமப்பட்டு அடையப்பட்ட வேதாந்த வித்தையை ஒவ்வொரு இரவிலும் நித்திரைவரவேண்டியதற்காக சில கதைகளைக்கேட்க விரும்பும் பிரபுக்களுக்கு காலம் போக்கவேண்டி உபயோகப்படுத்தி ஜீவிக்கும்படி நேர்ந்துவிட்டதே! ஆ:! இதைக்காட்டிலும், கஷ்டம் வேறு என்னவேண்டும்!

பரமபுருஷார்த்தமென்னும் மோக்ஷத்திற்கு ஸாதனமான வேதாந்த சாஸ்திரத்தை நியமம்தவறாது பைலவேண்டி ஸத்குருவைத்தேடிநாடி யடிபணிந்து அவரனுக்கிரகத்தாலடையப்பட்ட ஸத்வித்தையால் ஸம்ஸாரபந்தத்தை விலக்கமுபலாமல் பாபியான கலியின் கொடுமையால் அகாலத்தில் நியமத்தைவிட்டு அனதிகாரிகளுத்கு மிகவும் அற்பமான பயனைக்கருதி காமதேனுவைக் கலப்பையில் கட்டுவதுபோல் உபயோகப்படுத்தி பாபத்திற்குள்ளாகிறார்களே! அந்தோ! கலியின் விந்தை என்று ஓரறிஞர் வருத்தப்படுகின்றார்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்,

வேதாந்தஸாரம்.

(228-வது பக்கத்தொடர்ச்சி)

चिन्तनं च मनोधर्मः सङ्कल्पादिर्यथा तथा ।
अन्तर्भावो मनस्येव सम्यक्चित्तस्य शुध्यति ॥

சித்தம் என்ருல்சிந்திக்கும் தர்மத்தையுடையது என்பதுபொருள். 'மன் தானது ஸங்கற்பம் முதலான தர்மத்தை எப்படியடைகின்றதோ அவ்விதமே சிந்தனம் என்கிற தர்மத்தையும் அடைந்திருப்பதால் சித்தத்திற்கு மனதில் அந்தர்ப்பாவம் ஏற்படுகின்றது' என்றும்,

देहादावहमित्येव भावो दृढतरो धियः ।
दृश्यतेऽहंकृतेस्तस्मादन्तर्भावोऽत्र युज्यते ॥

'சரீரம் முதலியவைகளில் புத்திக்குத் த்ருடதரமான அகம்பாவம் ஏற்பட்டிருப்பதால் அகங்காரத்தைப் புத்தியிலடங்கி யிருப்பதாகக் கருதுவதே யுக்தமாகத் தோன்றுகின்றது' என்றும் பரமாசார்யாள் வெளியிட்டிருக்கிருர்கள். சித்தம், புத்தி, மனம், அகங்காரம் என்று கூறப்படுமிவை ஆகாசம் முதலான பூதங்களுடைய ஒன்ருகச் சேர்ந்த ஸாத்விகாம்சங்களிலிருந்து உண்டாகின்றன.

आकाशादिगताः पञ्च सात्विकांशाः परस्परम् ।
मिलित्वैवान्तःकरणमभवत्सर्वकारणम् ॥

என்று ஆசார்யாளும் கூறியிருக்கிருர்கள். இவை எல்லாம் பிரகாசஸ்வரூபங்களா யிருக்கின்றமையால் ஸாத்வீகாம்சத்தின் கார்யங்களாகக் கொள்ளப்படுகின்றன.

प्रकाशकत्वमेतेषां सात्त्विकांशत्वमिष्यते ।
प्रकाशकत्वं सत्वस्य स्वच्छत्वेन यतस्ततः ॥

ஸத்வகுணமானது ஸ்வச்சமாயிருப்பதால் அதற்குப் பிரகாசகத்வம் உண்டென்று ஸித்தமாயிருப்பதால் ஸத்வகுணங்களுடைய அம்சங்களிலிருந்தும் உண்டான இவைகளுக்கும் பிரகாசகத்வம் அங்கீகரிக்கப்படுகின்றது இந்தப் புத்தியானது ஞானேந்திரியங்களோடுகூடி விக்ஞானகோசமாகின்றது. இந்த விக்ஞானமயன் கர்த்திருத்வம், போக்த்ருத்வம், சுகித்வம், துக்கித்வம் முதலானவைகளுக்கு அபிமானியாகயிருப்பதால் இவ்வுலகிலும் பரலோகத்திலும் போகிறவனுயும், வியாவஹாரிக ஜீவனுகவும் சொல்லப்படுகின்றான்.

अहं ममेत्येव सदाभिमानं देहेन्द्रियादौ कुरुते गृहादौ ।
जीवाभिमानः पुरुषोऽयमेव कर्ता च भोक्ता च सुखी च दुःखी ॥

ஜீவன் என்று அபிமானங்கொண்ட இந்தப் புருஷன் தேகம், இந்திரியங்கள், வீடு, மனைவி, புதல்வன் முதலானவைகளைத் தானுகவும், தன்னுடையனவாகவும் அபிமானிக்கிறான். இவனே கர்த்தாவாகவும், போக்தாவாகவும், ஸுகதுக்கங்களையுடையவனுகவும் ஆகிறான் என்று ஆசார்யாளும் கருதுகின்றார்கள். மனமானது ஞானேந்திரியங்களோடுகூடி மனோமயகோசமென்று வழங்கப்படுகின்றது.

— இதையும்

मनो मनोमयः कोशो भवेद्ज्ञानेन्द्रियैस्सह ।
प्राचुर्यं मनसो यत्र दृश्यतेऽसौ मनोमयः ॥

மனமானது ஞானேந்திரியங்களோடு கூடினதாய் மனோமயகோசமென்கிற பெயரையடைகின்றது. இந்தக் கோசத்தில் இதர இந்திரியங்களுடைய சேர்க்கையிருந்தாலும் மனத்திற்கு ஆதிக்கமிருப்பதால் மனோமயம் என்று கூறப்படுகின்றது என்று ஒரு பெரியவர் வெளியிட்டிருக்கிறார். (தொடரும்)

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

இந்தியா முன்னேற்றமாம் விழியுங்கள்.

(உசகூ-வது பக்கத்தொடர்ச்சி)

ஊன்றிப்பாருங்கள். மதப்பற்று நமக்கிருந்தால் தைவபக்தி இருந்திருக்கும். தைவபக்தி அதிகரித்தால் ஆலயம் செல்வோம் ஆலயம் சென்றால் மந்திர ரூபமானமூர்த்தியுண்டென்றெண்ணு வோம். அவ்விதம் எண்ணினால் எல்லாம் ஈசன் செயலென்று நம்புவோம். அவ்விதம் நம்பினால் நமக்குப் பெரியோர்களெல் லோரும் தென்படுவார்கள். அப்போது நமக்கு அகங்காரம் குறையும். இவ்விதம் தைவச்செயலையே நம்பி அகங்காரத்தை அடக்கி ஆலய வழிபாடுள்ளவும் மந்திரங்களையும் நம்பி வெளி யில் உபதேசம் செய்யப் புறப்பட்டவனல்லவா லோகத்தை முன்னுக்குக்கொண்டுவரப் பாடுபடுவானுவான். இவவிதம் எத் துணை மகான் கிளம்பியிருக்கின்றனர். ஆஸ்திகர்களே! விழித் துக் கொள்ளுங்கள். தூங்கினது போதும். குதிரை கீழே தள் ளியதோடில்லாமல் குழியும் பரித்ததாம் என்ற பழமொழிக் கிணங்க நம் மதத்தைக் கெடுக்கப் புறப்பட்டிருப்பதைப் பார்த் தும் பொருமையையே மேற்கொண்ட நம் பெரியோர்கள் பேசா கலிருக்க இப்போது பிடிவாத வைதிகர்களென்று அம்மகான் களைக் கோல்கொண்டு குத்தவும் ஆரம்பித்தனர்.

ज्वलति चलितेन्धनोऽग्निः विप्रकृतः पन्नगः फणां कुरुते ।
प्रायः स्वं महिमानं धीरा विपदि प्रपद्यन्ते ॥

எறியும் நெருப்புச்சற்று சாந்தமானால் விறகைக்கொண்டு குத்தி னால் பொறிகளை விட்டுக்கொண்டு எறிய ஆரம்பிக்கும். சும்மா போகும் அரவத்தை கல்லாலெறிந்தால் அதுசீறிப் படமெடுக்கும் அவைபோல் ஞானிகளான மகான்கள் தங்களுக்கு ஆபத்துநே ரிட்டாலப்போது தன் மகிமையை வெளிப்படுத்துவார்களென்ற நியாயப்படி இனிச்சற்றும் சும்மாஇரார். பாருங்கள் ஆஸ்திகர் களே! ஆலயம் தொழுவது சாலவும்நன்று. கோயிலில்லா ஊரிற் குடியிருக்கவேண்டாம் என்று குழந்தைப்பர்வத்திலேயே போதி

த்த ஔவை கிழவிபோல் அவள் வசனமும் கிழண்டு விட்டதோ அவ்விதம் இப்போது மகான் எனப் புகழ்ப்படுகிறவர்கள். கோயிலில் நுழைந்து முறைப்படி தைவத்தை அனுதினமும் வணங்குகிறார்களா அவ்விதம் வணங்காவிட்டால் அவர்களிடத்தில் தைவசக்தி இருக்குமா? தைவசக்தி இல்லாவிடில் ஆஸுர சக்தியும் பிடிவாதமுமே மேலிடுமென்பது நமது ஸித்தாந்தம். ஆகவே லோகமுன்னேற்றத்திற்கு ஆசைவைக்கும் நாம்மனதில் தைவசக்யைத்தங்கவைக்கவேண்டும். தைவத்தின் வாக்குகளான வேதசாஸ்திரங்களைப் பூராவாய் நம்பவேண்டும். அவ்விதநம்புதலேற்பட்ட வர்ணாசிரம தர்மத்தில் சிரத்தைவைத்துத் தன் தன் குலாசாரப்படி அனுஷ்டித்தல் வேண்டும் வர்ணாசிரமம் தப்பு என்றால் ஈசன்வாக்குப் பொய்யென்று சொன்னதாய் ஆகும் அவ்விதமானால் ஈசன் ஒருபோதும் உனக்குத் துணையாகமாட்டான். பாருங்கள் இவ்வுலகில் பிள்ளையைப் பெற்றுவளர்த்த தகப்பனைச் சற்றும் மதியாது இஷ்டப்படி கெட்ட ஸகவாஸம் செய்துகொண்டு தகப்பனையும் திட்டித்திரிந்தால் தகப்பன் அவனை என்சொற்கேளாதவனென்றும் கெட்டவழியிற் செலவு செய்வதால் இவனுக்கு ஸொத்தில் பாத்தியமில்லையென்றும் அரசாங்கத்தாரிடம் முறையிட்டு அவனைத்திக்கற்றவனாய் வெருட்டிவிடுகிறான். அதுபோல் கடவுளை ஒருவிதமாய் ரூபத்துடன் தியானம் செய்யவேண்டும் அவனது வாக்குவேதமென்றும் அதை மீறினால் கடவுள் அவனைத் தண்டிப்பாரென்று பயந்து நடப்பவனை அவன் தியானிக்கும் ரூபமாய் இருந்து காப்பாற்றுவார். அப்படியில்லாமல் கடவுள் ஒருஜாதி கீழ்ப்பட்டவனென்று சொல்லியிருந்தால் அம்மதம் எனக்கு வேண்டாம். அதை நான் நம்பமுடியாது என்று சொல்வதனால் அவன் ஈசனுக்கு அடங்கிப்பேசுபவனாய்க் காண்கிறதா? இத்தகையாரின் வார்த்தையை எவ்விதம் ஒப்புக்கொள்ள முடியும், வர்ணதர்மத்தையும் வர்ணத்தையும் ஏற்றுக்கொண்டால் தான் உலகம் நடைபெறும். இதற்கு இந்த திருஷ்டாந்தத்தை கவனியுங்கள். ஓர் பிரபுவுக்கு நான்கு பிள்ளைகள் உண்டு. அவர் மூத்த புத்திரனை வேதங்கள் கற்குமாறும் அடுத்தவனை இங்கி... அதற்கடுத்தவனை வீட்டில் கிராமத்திலிருந்துவரும்

பதார்த்தங்களைச் சேகரித்துக் கொள்வன கொடுப்பன செய்யவும் நான்காவதவனை கிராமவேலைகள் செய்யவும் ஏற்படுத்தினர். அவ்விதமே அவர்கள் நடந்து மூத்தவன் எப்போதும் அதிகாலையில் எழுந்திருந்து ஸ்நானம் ஜபம் பாராயணம் தேவபூஜை செய்வதும் வைசுவதேவம் செய்வதும் புராணக்கிரந்தங்கள் பார்ப்பதுமாகவே காலம்கழித்து சாயங்காலத்தில் ஸந்தியாவந்தனம் ஸஹஸ்ரநாமம் இந்திராக்ஷீ முதலிய மந்திரபாராயணம் செய்து விபூதிப்பிரஸாதத்தை வீட்டில் யாவருக்குமளிப்பதுமாய் இருந்தான் அடுத்தவன் உயர்ந்த பரீக்ஷையில்தேறி பெரிய உத்தியோகம் வகித்து வந்தவர்களுக்கு பேட்டி கொடுப்பதும் மோட்டாரில் வெளிப்போவதும் ஓய்வுவேளையில் சாய்ந்த நாற்காலியில் படுத்துக் கொண்டு பத்திரிகை பார்ப்பவனுமாய் இருந்தான் அண்ணன் விபூதி கொடுக்கவரும்போது வணக்கமாய் எழுந்திருந்து பெற்றுக்கொள்வான். 3-வதுவன் கிராமத்திற்குப் போவதும் 4, 3, 10, நாள் சென்று வருவதும்போவதுமாய் இருந்து கொண்டு வீட்டுயோகக்ஷேமத்தை கவனித்துவந்தான். நான்காவதுவன் கழனிக்குப்போவதும் களஞ்சியங்களில் தானியங்களை நிறப்புவனுயு மிருந்து இவ்விதம் குடித்தனம் வெகு ஒற்றுமையாய் நடந்தது. இதைப் பார்த்த தகப்பன் குடும்பம் இனி ஒற்றுவாழும் என்று பரமானந்தம் கொண்டு சுகித்திருந்து காலத்தைக்கழித்தான். பொறுமையுள்ள ஆஸ்திகர்களே! இதைச்சற்று கவனியுங்கள். இந்தக் குடும்பம் என்றுவது கெடுமா இதில் யாருக்காவது கௌரவக் குறைவுண்டா அதுபோல பிர்மா உலகத்தை சிருஷ்டித்துத் தன் வீடாகிய இந்தியாவில் பிராமணன் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரன் என்ற நான்கு புதல்வரைப்பெற்று ஒற்றுவாழவேண்டி ஒவ்வொருவனுத்கும் ஒவ்வொரு கன்மாவைக் கொடுத்தால்தான் சுகமாய் வாழலாமென்றெண்ணிக் கொடுத்தனர், இதை நீ எவ்விதம் மாற்றுவாய் எல்லோரும் எதையும் செய்யலாமென்றுனுல் ஒருவனும் பொறுப்பாய் ஒரு கன்மாவையும் செய்யமாட்டான். அவன் செய்வானென்று இவனிருப்பான் என்பது லௌகிகத்திலும் ஒத்திருக்கிறதே இதைவேண்டாமென்று சொல்வது புத்திசாலித் தன்மைக்கழகல்ல. ஆனுல் நான்கை ஒப்புக்கொள்கிறோம் அக்

தாவதற்குத்தான் பிரமாணமில்லையென்பது எங்களது வாதம் என்றால் இதைகவனிப்பாம்.

இதற்கு சாஸ்திரப்ரமாணம் இருக்கிறதென்பதைப் பற்றி இப்பத்திரிகை வாயிலாய்ப் பன்முறை பரைசாற்றியுள்ளோம். மீண்டுமதைப்பற்றி விவரிக்க வேண்டாம். ஆயினும் இதொன் றையே இங்கு கேட்கிறேன். தீண்டாதவர்கள் என்பதற்கு சாஸ்திரத்தில் பிரமாணம் இருக்கிறதா இல்லையாவென்ற சங்கை நிகழக் காரணம் யாது ? ஓர் விஷயத்தில் நிச்சயம் ஏற்படுமுன் அவ்விதமா இவ்விதமா வென்று நிச்சயம் தெரியாமலிருக்கும் போது தான் சங்கை நிகழும். உதாரணமாக சாயங்காலத்தில் அதிக இருட்டுவர ஆரம்பிக்கும்போது சற்று தூரத்தில் ஒன்று தென்படுவதைக் கண்டான். அதை உற்று நோக்கினன். ஆனல் இன்னதென்று நிச்சயம் கொள்ளவில்லை. முன்செல்ல பயந்து நின்று கொண்டிருந்தான். எதிரில்வருபவனைப் பார்த்து அப்பா அங்கு நிற்பதென்ன. மொட்டைக்கட்டையா மனிதனு வென் றுன். அதுபோல் இவர்கள் தீண்டாதவர்களா இல்லையா வென்ற சம்சயத்திற்கு மூலம் வேண்டும. கட்டையா மனிதனு வென்றவிடத்தில் இருவித சங்கைக்கும் இடமிருக்கிறது. ஏனெ னில் மனிதனென்று நினைத்தால் அவ்வளவு உயரமும் தலையும் காலுமிருப்பதுபோலும் தோன்றுகிறது. கட்டையும் அவ்வித மிருக்கலாம். ஆகவே ஸரியாய் நினைக்கக் கூடிய இரண்டு விஷய மாய்த்தான் சங்கை நிகழலாமே தவிற வேறென்று ஒருபோதும் வராது. கட்டையா மனிதனு வென்றுனே தவிர கட்டையா பக்ஷியாவென்று கேழ்க்கமாட்டான். அதுபோல் இங்கும் தீண் டத்தகாதவர்கள் தீண்டத் தக்கவர்கள் என்று அனுதிகாலமாய் தொன்றுதொட்டு நம் இந்தியாவில் மனிதர்களுக்குள் வழங்கி வருகிறதென்பதைப் பிரதிவாதியும் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆகவே தீண்டத்தகாதவர்கள் இவர்களல்லவென்றால் வேறு எந்த மனிதர்களென்பதைக் காட்டித்தீரவேண்டும். தீண்டத்த காதவர்களே இல்லையென்றால் இதுகாறும் இப்பதம் நமக்குள் பழகிவருவது எதனுல் என்பதையும், மகரிஷிகளும் பகவதவதார மாய் விளங்கும் ஆசாரியர்களும் ஒற்றுக்கொண்டது எதனுல்

என்பதையும், இதுகாறும் அனுஷ்டிக்கப்பட்டு வருவது எதனு லென்பதையும் சரியானபடி விளக்கவேண்டும். எல்லாம் அறி யாத்தன்மையால் தானென்றால் அதுதான் சரியான சமாதானம்.

चण्डालोऽस्तु स तु द्विजोऽस्तु गुरुरित्येषा मनीषा मम ।

"அவன் சண்டாளனுயினும்சரி பிராமணனுயினும்சரி குருதான் எனக்கு என்எண்ணம்என்று உலகப்பற்றுதலை அறவேயொழித்து அத்வைதாநந்தத்தில் விளங்கும் ஆன்மஞானிகளுடைய அறிவு நிலையிலிருந்து கொண்டு பகவத்பாதர் மனீஷாபஞ்சகத்திலருளி னர். இதனுல் அத்தகைய அறிவுநிலையை அடையாதவனுக்கு சண்டாளன் என்றும் பிராமணன் என்றும் உயர்வும் தாழ்வும் உண்டென்றும் சொல்லாமற் சொன்னுர். ஆகவே இவைகளை யெல்லாம் அச்சமற உதறிவிட்டு வேதசாஸ்திரங்களுக்கும் ரிஷி களுக்கும் ஆசார்யர்களுக்கும் ஸம்மத மில்லாமல் இவர்களை யெல் லாம் கடந்ததாக காந்தியவர்கள் தீண்டாமை யென்பது இந்து மதக்திற்கு ஒருபெரிய பாபமென்றும் அதைவிலக்கி இந்துமதத் தையே சுத்தம் செய்யவேண்டு மென்றும் ஓயாமல் கூறினுல் இவர்களை நாம்எவ்விதம் மதிப்பது மதத்தையே சுத்திசெய்ய வல் லவோ வந்துவிட்டதாய்த் தோன்றுகிறது. கங்கையில் எல்லோ ரும் விழுந்து முழுகி கங்கை அசுத்தமாய் விட்டாள், ஈசனைப்பாபி களும் தொழுது அதனுல் ஈசனும் பாபியானுன், இவர்களை சுத் தம்செய்ய வேண்டியகாலமும் வரலாமென்று எதிர்பார்க்கலாம். ஆகவே முழுமோசமாய் இருக்கிறது. ஆர்யஜனங்களே! விழி யுங்கள். மகரிஷியின் ரத்தம் நமது தேகத்தில் ஓடுவதாய் எண் ணுங்கள் நம மூதாதைகளான மகரிஷிகளும் பரமாசார்யர்களும் புத்தி ஸ்வரூபமென்று நினையுங்கள் அவர்களிடத்தில் புத்தியீனத் தைக் கற்பித்து நாம் புத்திசாலிகளாகவேண்டாம். உலகமுன் னேற்றத்தை மனதில் சிந்தியுங்கள், கடவுளை வழிபடுங்கள் வர்ணு சிரமதர்மத்தை நிலை நிறுத்துங்கள், எல்லோரையும் சகோதரர்க ளாய் நினையுங்கள். ஜீவகாருண்யம் காட்டுங்கள். குருசரணங்களை கெட்டியாய்ப் பிடியுங்கள். மனம் போனபோக்கெல்லாம்போகா

தீர்கள். வெளியிலுள்ள வீண் கூக்குரலைக்கவனிக்காதீர்கள். மெள்ள மெள்ள எந்தெந்தக்கைத்தொழில் எவனெவன் செய்வதாய் ஈசன் சட்டத்தில் எழுதினாறோ அவ்விதமே இனிப்பின்தொடர ஆரம்பியுங்கள். வேதசாஸ்திரங்களை நம்புங்கள். ஈசன் நமக்கு உடனே அருள்புரிவார். சுபம்.

எம். என். சுப்ரமண்யசாஸ்திரிகள்.

ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம், நாகபட்டணம்.

இந்நகரில் ஸ்தாபிதமாயிருக்கும் "ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள் மடம் கைங்கர்ய ஸபை"யாரால் 28—4—1925 மங்களவாரதினம் ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவத்தை நாகைஸப்ஜட்ஜியும், புண்யபுருஷரும், பக்தசிகாமணியும், ஞானப்ரகாசரும், கருணைக்குப் பிறப்பிடமும், புகழுக்குறைவிடமும், பொதுநலத்துக்குழைப்பவருமான ப்ரும்மஸ்ரீ S. ராமஸ்வாமி சாஸ்திரிகளவர்களின் மகிமைவாய்ந்த அக்ராஸனத்தின் கீழ் எவ்வருஷத்தையும்விட இவ்வருஷம் வெகு விமர்சையாயும் மஹாஜனங்களின் அதிகரித்த சிரத்தையுடனும், உத்ஸாகத்துடனும் கொண்டாடப்பெற்றது. அன்றையதினத்தில் ஸ்ரீ நீலாயதாக்ஷியம்மன் ஆலயம் பந்தற்காக்ஷி வஸந்த மண்டபத்தில் அழகாய் அலங்கரிக்கப்பெற்ற ஸ்ரீ பகவத்பாதாள் அவர்களின் திருஉருவப் படத்தின் ஸன்னிதியில் காலையிலிருந்து அனேக வைதிக சிரேஷ்டர்கள் முகமாய் உபநிஷத் முதலிய வேதபாராயணமும், ஷோடபடத்துக்கு விசேஷ ஆராதனைகளும் சேங்காலிபுரம் ப்ரும்மஸ்ரீ வைத்யநாதசாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீ லோகாசாரியரின் அவதாரமஹிமையின் ப்ரவசனமும் நடைபெற்றதுடன் ஸ்ரீ காயாரோகணேச்வரருக்கும், ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்பிகைக்கும்: ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்வாமிகளுக்கும் வேதகோஷத்துடன் விசேஷ அபி

ஷேக ஆராதனைகளும் நடந்ததும் ஸ்ரீ ஸ்வயம்ப்ரகாசவிலாஸ்வேத பாடசாலையில் சுமார் 400 பிராமணர்களுக்கு அறுசுவைகளுடன் கூடிய ஸந்தர்ப்பணையும், சுமார் 200 ஏழைப்பரதேசிகளுக்கு அன்னதானமும் வழங்கினார்கள். இரவில் ஷை கோவில் ஷை மண்டபம் ஸ்ரீ லோகாசார்யாள் திருவுருவப்படத்தின் ஸன்னிதியில் ஸ்ரீ மடம் ஸ்ரீ மஹாஸன்னிதானத்திலிருந்து விஜயமாகியிருந்த ராஜபுரம் ப்ரும்மஸ்ரீ ராமசந்திர சாஸ்திரிகளவர்கள் முகமாய் ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதாளவர்களின் மஹிமைகளும், அவர்களின் அவதாரமென்றே நிச்சயபுத்தியுடன் உலகத்தாரால் மதித்து கொண்டாடப் பெற்றுவரும் ப்ரகிருதம் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதிகளாய் ப்ரகாசிக்கும் நமது ஜகத்குரு ஸ்ரீ ஆசார்யாளவர்களின் அனேகமஹிமைகளும் விரிவாய் உபந்யஸிக்கப்பெற்று, ஸ்ரீ மஹாஸன்னிதான ப்ரஸாதங்களும் அசேஷவித்வன் மஹாஜனங்களுக்கு அனுக்கிரகிக்கப்பெற்று பிறகு ஸ்ரீ சங்கரபகவத்பாதாளவர்களின் திருவுருவப்படம் எழுந்தருளி ஸ்ரீ காயாரோகணேச்வரரையும், ஸ்ரீநீலாயதாக்ஷி அம்பிகையையும் வேதகோஷத்துடனும், திருப்புகழ் வித்வானாகிய ப்ரும்மஸ்ரீ நடராஜய்யரவர்களின் கூட்டம்நிறைந்த பஜனை கோஷ்டியுடனும், நாகை தேவார கோஷ்டியுடனும், வாத்யகோஷங்களுடனும் வெகு சாவகாசத்துடனும், உத்ஸாகத்துடனும், விமர்சையாய் பிரதக்ஷிணம் வந்து ஆஸ்திகர்களுக்கு ப்ரஸாதம் அளிக்கப்பெற்றது. இது ஸம்பந்தமான அன்னதானங்களுக்கும் இதர வைபவங்களுக்கும் வெகுவாய் பொருள் உதவிசெய்த இந்நகரிலுள்ள மாங்குடி மகா-ள-ள-ஸ்ரீ S. ஸுந்தரப்பய்யரவர்கள். மகா-ள-ள-ஸ்ரீ T. S. பஞ்சாபகேசய்யரவர்கள், மகா-ள-ஸ்ரீ கோ. வெ. நாகராஜய்யரவர்கள், வக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ S. ஸ்ரீனிவாஸய்யரவர்கள், நாகை தாலுகாபோர்டு ஹெட்கிளர்க் மகா-ள-ஸ்ரீ வெங்கட்டராமய்யரவர்கள், மகா-ள-ஸ்ரீ அ. மு. பொன்னுசாமிசெட்டியாரவர்கள், மகா-ள-ஸ்ரீ அ. மு. ம. சோமசுந்தரம்செட்டியாரவர்கள், மகா-ள-ஸ்ரீ அ. மு. சக்கரபாணி செட்டியாரவர்கள், மகா-ள-ஸ்ரீ பொ.மு.நா. முத்துராமஸாமி செட்டியாரவர்கள், மகா-ள-ள-ஸ்ரீ நாகரெத்தின முதலியாரவர்கள்

முதலியவர்களின் தர்ம சிந்தனையும், நகரவாஸிகளான ஸகலவியாபாரிகளின் தர்மமும் ரொம்பவும் பாராட்டத்தக்கது. ஷடி கைங்கர்யஸபை கார்யதர்சியான ப்ரும்மஸ்ரீ N. ஸாம்பசிவய்யாவர்கள் இவ்விஷயத்தில் யாவரையும் ஒருமைப்படுத்த எடுத்துக்கொண்டிருக்கும் பெரும் விடாமுயற்சிக்கும், சிரமம்பாராட்டாத அளவுக்கு மீறிய உழைப்புக்கும் ஸ்ரீ ஜகத்குருவும், ஸ்ரீமத்ரிபுரஸுந்தரி ஸமேதராகிய ஸ்ரீ சந்திரமௌளீச்வரப்பெருமானும் அவருக்கு கோறியவரன்களைக் கொடுத்தருளி பூர்ணானுக்ரகம் செய்வார்களாக. எத்தகையோரையும் எம்முறையிலாவது நல்வழிப்படுத்த எப்போதும் உழைத்துவரும் நாகை ஸ்காட்டிஷ் பிரான்சு அச்சாபீஸ் ப்ரும்மஸ்ரீ ப. லெ. வெங்கட்டராம சாஸ்திரிகளவர்கள் இக் கைங்கர்யங்களை ஸூத்ரதாரர்போல் பாலித்து யாவரையும் ஒன்று சேர்த்து ஒவ்வொரு கார்யமும் ஒழுங்காய் நடத்திவைத்ததற்கு நீண்ட ஆயுளையும், த்ருடபக்தியையும், ஸகல சிரேயஸ்ஸையும் அடைய ஒப்பிலாக்கடவுள் அருள்புரிவாராக. நாகை ஹிந்து மதாபிமான ஸங்கத்தார் தங்கள் 34-வது வருஷ பூர்த்திக்கொண்டாட்டத்தை ஷடி ஸ்ரீ சங்கரஜயந்தி தினத்துக்கு 4-நாள் முன்னிருந்து ஆரம்பித்து அதன்பின் 2-நாள் கழித்து முடிவடையச் செய்து மத்தியில் ஸ்ரீமத்ஆசார்யஜபந்திக்கொண்டாட்டத்தைஉள்ளன்புடன் ஒத்துழைத்து நடத்தியதற்கும், நாகை கல்விச்சங்கம் ப்ரும்மஸ்ரீ கிருஷ்ணமாசார்யாரவர்களும் தங்கள் கார்யதரிசி மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீனிவாஸய்யங்காரவர்களுடனும், இதர அங்கத்தினர்களுடனும் மனத்திருப்தியுடன் இத்திருவிழாவை பரிமளிக்கச் செய்ததற்கும் அச்சங்கங்கள் சந்திர ஸூர்யர்கள் உள்ளவரையில் ஏராளமான பொருளுதவியும், மனுஷ்யபலமும், தெய்வபலமும் பெற்று பிரகாசித்துக் கொண்டிருக்கும் வண்ணம ஸ்ரீ ராஜராஜேச்வரி அருள் மழைபொழியவேணும். இம்மாதிரியே ஆஸ்திகர்கள் யாவரும் ஒருமனப்பட்டு இதற்காக பலதுளி பெருவெள்ளமென்ற பொருளுதவிதேடி ஏராளப்பெருகும் மாதிரியான நிதியேற்படுத்தி மேலும் மேலும் விமர்சையாய் இத்திருநாளை

வருஷந்தோறும் அனுபவித்து ஞானக்கண் திறந்து பிறவிதுன்பத்தை யொழித்து சாச்வதமாகிய பரப்ரும்மத்தில்லயமாகும்படி அனுக்ரகம் பெறவேணுமாய் பரஞ்சோதியைப்பிரார்த்திக்கிறேன்.

R. V. கோபாலன்.

நாகபட்டணம்,
1--5--25.

ஸமுதாய தாஸானுதாஸன்,
ஸ்ரீ மடம் V. S. ராமச்சந்திரன்.

திருவாதி ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம்.

திருவாதி க்ஷேத்திரத்தில் விளங்கும் ஸ்ரீ கோவிந்தஸாமி பட்டுகோஸ்வாமி அவர்கள் நாளது ஷை சென்ற சித்திரைமீ 16உ (28-4-25 ல்) பௌமவாரம் வைசாகசுத்த பஞ்சமியன்று ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத் பூஜ்ய பாதாசார்யாளுடைய 9-ஆவது ஷஷ்டிய ஜயந்தி மஹோத்ஸவத்தை அடியில் வரும் விபரப்படி தம் கிருகத்தில் விசேஷமாய்க்கொண்டாடினார்கள்.

காலை மணி 7—8	பாஷ்யபாராயணம்
,, 8—9	வேதாந்த வாக்கியார்த்தம்
,, 9-10	பிர்மஸ்ரீஎம் வைத்தினாதசாஸ்திரியள் அவர்கள் உபந்யாஸம்
,, 10-11	ஸ்ரீமத ஆசாரியபூஜை வேதபாராயணம்
,, 11-12	பிராமணஸமாராதனை
மாலை மணி 3—4	பானகபூஜை
,, 4—6	பிர்மஸ்ரீ மரூர் கணேச சாஸ்திரியள் உபந்யாஸம்
இரவு மணி 7—9	ஸ்ரீ மதாசார்ய பிம்பவீதிபாதக்ஷிணம்

இவ்விதம் உத்ஸவத்தை வெகு விமரிசையாய் நடத்தி தாங்களும் ஆசார்யானுக்கிரகத்திற்குப் பாத்திராளாகி மற்றுமுள்ளோர்களையும் அந்த அனுக்கிரகத்தைப் பெறும்படி செய்து உத்ஸவத்தை பூர்த்தி செய்தார்கள்.

இந்தமாதிரியே எப்பொழுதும் தாம் ஆசார்யகைங்கர்யத்திற்கு ஈடுபட்டுப்பிறரையும் ஈடுபடும்படி வழி காட்டும்படி ஆசார்யாள் இவர்களுக்கு அனுக்கிரகிக்க வேண்டுமாய் ஆசார்யாளையே நாமும் பிரார்த்திக்கிறோம். **ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.**

மாயவரம் சங்கரஜயந்தி மஹோத்ஸவம்.

இவ்வூரில் காவேரியின் ஸ்நாநகட்டத்திற்கு வடகரையில் விளங்கும் மடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் ஸ்ரீ ஜகத்குரு சங்கரபகவத்பாதாசார்ய ஸ்வாமிகள் அவர்கள் மூர்த்திக்கு நாளது ௵ சென்ற சித்திரை௴ 16௳ செவ்வாய்க்கிழமை பஞ்சமி திதியுமான ஸ்ரீமதாசார்யாளுடைய அவதார தினத்தில் ஷி உத்ஸவத்தை ஆரம்பம் செய்து அன்று முதல் 10-தினங்கள் வரையிலும் ஒவ்வொரு தினமும் காலை மாலை, இருவேளையிலும் ஷி ஆசார்ய மூர்த்திக்கு மஹாந்யாஸ பூர்வகமாய் அபிஷேகம் அர்ச்சனம் தீபாராதனம் முதலான கைங்கர்யங்களும் இரவில் 8-மணிக்கு மேல் அத்வைத ஸித்தாந்தம், ஆசார்யமஹிமை, பிராம்மண்யம் முதலியவைகளைப்பற்றிய உபன்யாஸங்களும் சங்கீதக் கச்சேரிகளும் நன்கு நடைபெற்று முடிவில் சந்தனம் தாம்பூலம் முதலான பிரஸாதங்களும் ஸகல ஜனங்களுக்கும் ஆதரவுடன் வழங்கப்பட்டன. முடிவான 10-வது தினத்தன்று விசேஷமான அபிஷேகார்ச்சனங்களும் பகலில் பிராமண ஸந்தர்ப்பணைகளும் மாலையில் வேதபாராயணம் பஜனைகோஷ்டி சிறந்த மேளவாத்தியங்கள் இவைகளுடன் கூட மற்றும் பல பக்தகோஷ்டிகளாலும் சூழப்பட்டு ஸ்ரீமதாசார்யமூர்த்திக்கு வீதிப்பிரதக்ஷிணமும் வெகு விமர்சையாய் நடத்தி இவ்வருஷத்திய உத்ஸவம் பூர்த்தி செய்யப்பட்டது- இவ்விதம் எப்பொழுதும் இந்த உத்ஸவத்தை சிறப்பாய் நடக்கும்படி அனுக்கிரகிக்கவேண்டி ஸ்ரீமதாசார்ய சரணங்களில் அனேக கோடி வந்தனங்களுடன் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்,

ஆசார்யசிஷ்யகோடிகள்.

மதிப்புரை.

பிராமணன்.

இப்பெயர்வாய்ந்த வோர் தமிழ் வாரப்பத்திரிகையை அதின் பத்திராதிபரவர்களால் அனுப்பப்பட்டதைவரப்பெற்றோம் அப் பத்திரிகையின் நோக்கத்தையும் அதிலுள்ள விஷயங்களையும் பார்க்க மிகவும் திருப்தியாயிருக்கின்றது. ஸகல சிரேயஸ்ஸுக்கும் இன்றியமையாத ஸாதனமாய் அநாதிகாலம் தொடங்கி விளங்கிவரும் ஸநாதன தர்மங்களுக்கும் அதை அனுஷ்டிப்போர்களுக்கும் தற்காலமேற்பட்டிருக்கும் ஆபத்தை எவர் தான் அறியார். ஆனால் எவ்வித ஆபத்து நேர்ந்தாலும் அதை அற்பமேனும் பொருட்டாகக் கருதாமல் ஸ்ரீ ஜகத்குரு பரமாசார்யாளுடைய அனுக்கிரகபலத்தால் நம் ஆர்யதர்ம பத்திரிகையானது சுமார் 10-வருஷகாலமாய் வர்ணாசிரம தர்மத்தைக் கைவிடாமல் அதன் பெருமையையும் அனுஷ்டிக்கவேண்டிய முறைகளையும் அதிகாரிகளையும் மற்றுமுள்ள விபரீத வாதங்களுக்கு சாஸ்திரீயமான மறுப்பையும் தன்னாலியன்றவரையில்வெளியிட்டுக் கொண்டு வருகிறது. தர்மத்தைப் பாதுகாப்பது க்ஷத்திரியன் கடமை என்றுணர்ந்தது போல சில வருஷங்களுக்கு முன் க்ஷத்திரியன் என்று பெயர்பூண்ட ஒரு பத்திரிகையும் இதற்கு ஸாதகமாய் ஏற்பட்டு ஸநாதநதர்மத்தைக் கைவிடாமல் போதித்துவருகின்றது. தற்காலம் பிராமணன் என்கிற இப் பத்திரிகையும் வெளிவந்துலாவ ஆரம்பித்துவிட்டது. இதின் நோக்கமும் வர்ணாசிரம தர்மங்களை சாஸ்திரங்களின் கருத்திற்கிணங்க நன்கு வெளியிடுவதும் பிராமணர்களின் பெருமையைப் பிரகாசப்படுத்துவதுமே முக்கியமெனத்தெரிகின்றது. இதுவரையில் பிராமணன் என்று திருநாமம் பூண்டு அதற்கவசியமாயுள்ள தர்மங்களையும் பெருமைகளையும் மாத்திரம் வெளியிடும் பத்திரிகை அறிதாயிருந்தது. ஸ்ரீ பகவான் தற்காலம் பிராமணர்களுக்கும் வர்ணாசிரம தர்மங்களுக்கும் நேர்ந்திருக்கும் கஷ்டங்களை ஸஹிக்காமல் கீதா

சாஸ்திரத்தில் यदायदा என்கிற சுலோகத்தினுல் தர்மத்திற்குக் குறைவேற்படும்கால் நான் பாதுகார்க்கிறேனென்று செய்திருக்கும் பிரதிக்ஞைக்கிணங்க அவைகளை நன்ருய் ரக்ஷிக்கவேண்டி பிரத்தியேகமாய் இப்பத்திரிகை வேண்டுமென்று ஏற்படுத்தியிருப்பதாகவே கருதவேண்டியிருக்கிறது. ஸ்ரீ பகவானுடைய அனுக்கிரகபலத்தால் இப்பத்திரிகை ஆரம்பகாலத்தில் தான் கொண்டிருக்கும் சாஸ்திரங்களுக்கும் ஸாதுக்களுடைய அனுஷ்டானங்களுக்கும் உசிதமாய் ஸநாதன தர்மத்தை வெளியிட வேண்டுமென்கிற கொள்கையை எக்காரணத்தைக் கொண்டாவது கைவிடாமல் உறுதியான பிடிவாதத்துடன் மெம்மேலும் விசேஷமாய் அபிவிருத்தியடைந்து ஸநாதன தர்மமென்னும் கற்பக விருக்ஷத்தை ஜகத்தில் நன்ருய்த் தளிர்த்தோங்கும்படி செய்யவேண்டுமாய் நாமும் பகவானைப் பிரார்த்திக்கிறோம். இப்பத்திரிகையாலுண்டாகும் லாபத்தை இதன் பத்திராதிபரால் ஏற்படுத்தப்படும் பிராமணகுருகுலத்திற்கு உபயோகப்படுத்தப்படுமென்றும் இதின் மானேஜரால் வெளியிடப்பட்டிருக்கின்றது.

இதின் வருஷ சந்தா ரூ. 1-12-0
தனிப்பிரதி விலை ரூ. 0-0-3

மானேஜர்,
பிராமணன் ஆபீஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை.

ஸ்ரீ ருத்திரம்:—பெரம்பூர் மீமாம்ஸா சிரோமணி பண்டித கே. கணேசசாஸ்திரியவர்களால் அனுப்பப்பட்ட இப்புத்தகத்தை வரப்பெற்றோம். யஜுஸ்ஸம்ஹிதையின் நாலாவது காண்டம் ஐந்தாவது பிரச்னமான இதின் மூலத்தைத் தெளிவான கிரந்த எழுத்திலும் ஒவ்வொரு மந்திரங்களுக்கும் பதங்களை வெவ்வேருக எழுதி அவைக்குறிய பொருளையும் திராவிட பாஷையில் நன்கு விளக்கிக்காட்டி பொழிப்புரையும் ஆங்காங்கு சுருக்கமாய் எழுதப் பட்டிருக்கின்றது.

வேதங்களுக்குப் பொதுவாய் விசேஷ மகிமை கூறப்பட்டிருப்பினும் ஸ்ரீ ருத்ரம் என்கிற இந்த பாகத்திற்குப் பிரத்தியேகமாய் அதிகமான அதின் மகிமையை பல பண்டிதசிகாமணிகளால் அறிவிக்கப்பட்டிருப்பதை அறிஞர்களனைவரும் அறிந்த விஷயமே.

மண்ணுலகிலோ விண்ணுலகிலோ யார்யார் எவ்விதப்பயனை யடைய விரும்பினும் அப்பயனையளிக்கும் சக்திபெற்றது இது என்பதற்கு தேவதாராதனங்களையும் வைதிகமான சாந்திமுதலிய கர்மானுஷ்டானங்களையும் அடிக்கடி இதையே கொண்டு நடத்துவதே சிறந்த அத்தாக்ஷியாகும். இதின் மகிமையையும் இதிலுள்ள மந்திரங்களின் பொருட்சுவையையும் நன்கறியாமல் பலர் சிரமப்படுகிறார்கள் என்று கருதி ஷை சாஸ்திரியள் இவ்விதம் புஸ்தக ரூபமாய் வெளியிட்டிருப்பது பல ஜனங்களுக்குபகாரமாயிருக்குமென்பதை நான் அறிவிக்கவேண்டியது அனுவசியம். இதைப் பார்க்கத் தகுந்த அதிகாரிகள் யாவரும் சுலபமாய் வாங்கிப்படித்துப்பயன் பெறவேண்டி இதின் கிரயமும் அற்பமாக 1--4--0 ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அபேக்ஷையுள்ளவர்கள் அடியிற் கண்ட விலாசத்தாருக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

பண்டிட், நடேசசாஸ்திரியள்,

எடிடர், ஆர்யமத ஸம்வர்த்தினி.

1/72 பெரியதெரு. திருவேல்லிக்கேணிசென்னை,)

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.